உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 15.06.2026 • மலர் 04 • இதழ்: 166 • திங்கட்கிழமை • Edition : Nagercoil • 15.06.2026 • Vol : 04 • Issue : 166 • Page : 4 • Rs. 5/-

### புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிப்பது என்பது

# இந்தியாவின் மரபணுவிலேயே இருக்கிறது

## பிரதமர் மோடி புகழாரம்

நீஸ், ஜூன் 15

கடந்த 2014ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் மோடி பிரதமர் ஆனார். இப்போது 3வது முறையாக பதவியில் நீடித்து வருகிறார். அவரது அரசு 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.இந்த 12 ஆண்டு காலத்தில் அவர் பல்வேறு உலகநாடுகளுக்கு சென்று வந்துள்ளார். சமீபத்தில் ஐக்கிய அரபுகுடியரசு,ஹாலந்து, சுவீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு சென்று வந்தார்.

இந்த நிலையில் அவர் மீண்டும் வெளிநாட்டு பயணம் மேற்கொண்டு உள்ளார். இந்த முறை ஐரோப்பிய கண்டத்தில் உள்ள பிரான்ஸ் மற்றும் சுலோவாக்கியா நாடுகளுக்கு செல்கிறார். இதனையடுத்துஅவர்நேற்று சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்றார். பிரான்சில் உள்ள நீஸ் விமான நிலையத்தை மோடி நேற்று இரவு சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர்பிரதமர்மோடி தான் தங்கும் ஓட்டலுக்கும் சென்றார். அங்கு அவரை இந்திய வம்சாவளியினர் உற்சாகமாக வரவேற்றனர்.

இந்த நிலையில், பிரான்ஸ் சென்றடைந்த பிரதமர் மோடியை அந்நாட்டுப் பிரதமர் இமானுவேல் மேக்ரான் ஆரத்தழுவி வரவேற்றார். 'பாரத் இன்னொவேட்ஸ்' என்ற தலைப்பில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றுள்ளார்.

மாநாட்டில் பிரதமர் மோடி பேசுகையில்,

இந்தியாவின் பாதுகாப்புத் துறையும் புத்தாக்கத்திற்காகத் திறக்கப்பட்டுள்ளது. இன்று, பாதுகாப்பு மற்றும் விண்வெளி தொடர்பான நூற்றுக்கணக்கான புத்தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் அற்புத மானபணிகளைச்செய்து வருகின்றன. சமீபத்தில், இந்தியாவின் அணுசக்தித் துறையிலும் முக்கிய சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, இந்தியா தனது அறிவாலும் புத்தாக்கத்தாலும் உலகிற்குப் புதிய திசையைக் காட்டியுள்ளது. கணிதம் முதல் வானியல் வரை, மருத்துவம் முதல் யோகா வரை, இந்தியாவின் பங்களிப்பே ஒட்டுமொத்த மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமைந்துள்ளது. இன்று, இந்தப் பாரம்பரியத்திற்கு நாம் ஒரு புதிய வேகத்தையும் புதிய திசையையும் அளித்துள்ளோம். புதிய கண்டுபிடிப்புகள் கண்டுபிடிப்பது என்பது இந்தியாவின் மரபணுவிலேயே இருக்கிறது.

மத்திய கிழக்கு பதிகளில் நிலவும் மோதல்கள் மற்றும் பருவநிலை மாற்றம் அதிகரித்து வரும் தாக்கங்களுக்கு மத்தியில், உலகம் முன்னெப்போதும் இல்லாத பெரும் மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. ஆனால் இன்று, மனிதகுலத்தின் முன் சவால்கள் இருந்தாலும், அளவற்ற வாய்ப்புகளும் உள்ளன. செயற்கை நுண்ணறிவு, குவாண்டம் கணினி, உயிரித்தொழில்நுட்பம், விண்வெளித் தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்பட்ட பொருட்கள் ஆகியவை மனிதகுலத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் தொழில்நுட்பங்களாகும். இவையே மனித நாகரிகத்தின் அடுத்த அத்தியாயங்கள். ஒவ்வொரு தொழில்நுட்பப் புரட்சியும் மனிதகுலத்திற்கு ஒரு புதிய வாய்ப்பை அளிக்கிறது, மேலும் ஒவ்வொரு வாய்ப்பும் ஒரு புதிய பொறுப்பையும் கொண்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

மாநாட்டை முடித்துக்கொண்டு நீஸ் நகரில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மெக்ரானுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை நடத்துகிறார். இதில் இரு தரப்பு உறவை மேலும் வலுப்படுத்துவது, வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு, முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகள்குறித்து ஆலோசனை நடத்துகிறார்கள்.



பின்னர்பிரதமர்மோடி பிரான்சில் இருந்து 2 நாள் பயணமாக சுலோவாக்கியவுக்கு செல்கிறார். அங்கு அந்நாட்டு அதிபர் பீட்டர் பெல்லெக்ரினி, பிரதமர் ராபர்ட்பிகோ ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார். அதன்பின் மீண்டும் பிரான்சுக்கு திரும்பும் மோடி 16,17 ம் தேதிகளில் எவியன் நகரில் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

18ம் தேதி பிரான்ஸ் தலைநகர்பாரீசுக்கு செல்லும் பிரதமர் மோடி அங்கும் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்துகிறார். இந்த பேச்சுவார்த்தைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது.

### ஸ்ரீ அன்னைக்கரங்கள் அறக்கட்டளையின் சார்பாக

## 8 ஆம் ஆண்டு,இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி



கோவை ஜூன்:15

ஆண்டு தோறும் உலக இரத்த கொடையாளர்கள் தினமானஜூன்14ம்தேதியில்இதுகுறித்துவிழிப்புணர்வை பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில், ஸ்ரீ அன்னைக்கரங்கள் அறக்கட்டளை சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்க பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டு, விழிப்புணர்வு பேரணியாக நடைபெற்றது. கோவை நேரு விளையாட்டு அரங்கம் முன்பாக துவங்கப்பட்டு, ரேஸ் கோர்ஸ், ஆர் எஸ் புரம் போன்ற கோவையின் முக்கிய சாலை வழியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி நிறைவாக செம்மொழிப் பூங்காவில் நிறைவு செய்தனர். இதன் துவக்க விழா நிகழ்ச்சியில், கோவை மாவட்ட போக்குவரத்து கூடுதல் துணைகாவல் ஆணையர் ரவிச்சந்திரன், மெஸ்ஸர்கட்டிங் சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் மணி நாராயணன், ஓய்வுபெற்றநெடுஞ்சாலைத்துறைகோட்டப்பொறியாளர் மனுநீதி, சுமங்கலி ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் நிறுவனர் அஸ்யந்த் ஜி டி நாயுடு அறக்கட்டளை சார்பாக சமூக ஆர்வலர் அஞ்சனகுமார் ஆகியோர் கலந்து கொண்டு இப்பேரணியை துவக்கி வைத்தனர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய ஸ்ரீ அன்னைக்கரங்கள் அறக்கட்டளையின் தலைவர் ரோபிநாத் கூறியதாவது.. நாளுக்கு நாள் ரத்த தானத்தின் சேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனால் ரத்தம் வேண்டும் என்று கேட்போரின் எண்ணிக்கையும் அதிகமாகி வருகிறது. ஆனால்ரத்ததானம்செய்யமுன்வரும்கொடையாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. இதனால் பல உயிரிழப்புகள் ரத்தம் கிடைக்காமல் ஏற்படுகின்றது. இதனை தடுக்கும் பொருட்டு, ஸ்ரீ அன்னை கரங்கள் அறக்கட்டளை சார்பாக கடந்த ஏழு வருடங்களாக, இரு சக்கர வாகன பேரணியானது, ரத்தக் கொடையாளர் தினமான, ஜூன் 14ம் தேதி நடத்தப்பட்டு வருகிறது. இந்த பேரணி மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, இரத்தக்கொடையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது எங்களின் முக்கிய நோக்கம் என்று கூறினார். இவ்விழாவில் ஸ்ரீ அன்னை கரங்கள் அறக்கட்டளை சார்பாக சுரேஷ், பிரகாஷ், மற்றும் மகளிர் அணி சார்பாக கயல்விழி, ஜோடி சார்லட், உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### கேரளா குமரி மாவட்ட எல்லைப் பகுதியில்

## சொகுசு கார் _ கேரளா அரசு பஸ் மோதி விபத்து; 10 பேர் படுகாயம்



களியக்காவிளை, ஜூன்.15

குமரி கேரளா எல்லை பகுதியான பாறசாலை அருகே கொற்றாமம் என்ற பகுதியில் திருவனந்தபுரம் பகுதியில் இருந்து களியக்காவிளை நோக்கி சென்ற குமரி மாவட்டம் குலசேகரம் பகுதியை சேர்ந்தவர்கள் பயணித்த சொகுசு கார் சென்று கொண்டிருந்தது. அப்போது கார் கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த ஆட்டோவில் மோதியது. பின் அதே வேகத்தில் கேரளா அரசு பேருந்து மீது மோதி ஏற்பட்ட கோர விபத்தில் 10 பேர் படுகாயம்அடைந்தனர். இந்தநிலையில் தீயணைப்பு வீரர்கள் மற்றும் பொது மக்கள் மீட்டு பல்வேறு மருத்துவமனைகளில் கொண்டு சென்றனர்.

காரில் வந்தவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த குலசேகரம் பகுதியை சேர்ந்தவர்கள் என தெரிய வந்துள்ளது. கார் மற்றும் ஆட்டோ முன்பகுதி முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளது இந்த விபத்து தேசிய நெடுஞ்சாலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

காரில் பயணித்த குலசேகரம் பகுதியை சேர்ந்த வினு (39), ஆன்லியா (10), ஆன்லின் ( 9) ஆகியோர் திருவனந்தபுரம் தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர்,

ஆட்டோ ஓட்டுநர் தங்கராஜன் (70,) மற்றும்அரசுபேருந்தில்இருந்தஅஞ்சனா (27)பாறசாலைஅரசுமருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். மற்றவர்கள் நெய்யாற்றின் கரை மருத்துவமனையிலும் சிகிட்சை பெற்று வருகின்றனர்.விபத்துகுறித்துபாறசாலை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருமருகலில் நுண்ணீர் பாசனம் திட்ட சிறப்பு முகாம்



நாகை, ஜூன் 15

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி சேகல் கிராமத்தில் நுண்ணீர் பாசனம் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது.

தோட்டக்கலை உதவி இயக்குனர் முகமது சாதிக் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்ற திருமருகல் வட்டார துணை தோட்டக்கலை அலுவலர் செல்லபாண்டியன் கலந்து கொண்டு பேசுகையில்: நுண்ணீர் பாசனம் என்பது ஒவ்வொரு துளி பாசன நீரையும் சிக்கனமாகவும் திறம்பட சீரிய தொழில்நுட்ப முறையாக பயன்படுத்துகிறது.

குறைந்த நீரைக்கொண்டு அதிக பரப்பில் பயிர் உற்பத்தி செய்ய வேண்டியது இன்றைய காலகட்டத்தில் மிகவும் அவசியமானது. அதற்கு நுண்ணீர் பாசன திட்டம் வழிவகை செய்கிறது.

இந்ததிட்டத்தின்மூலம் தண்ணீர் பயன்பாட்டு திறன் 40 சதவீதம் முதல் 60 சதவீதம் வரை. மகசூல் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை. இத்தொழில்நுட்பம் மூலம் உரங்களையும் பாசன நீர் வழியாக செடியின் வேர் பகுதிக்கு நேரடியாக செலுத்துவதால் உரப்பயன்பாடு 40 சதவீதம் வரை.

இதனால் பாசனநீர் சிக்கனமாக பயன்படுவதோடு உரங்களும் வீணாகாமல் தேவைக்கு ஏற்றார் போல் பயன்படுத்தப்படுகிறது. இந்த திட்டத்தில் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம், மழை தூவான் பாசனம் போன்ற அமைப்புகள் உள்ளன. இவ்வாறு அனைத்து அமைப்புகளுக்கும் ஒரே மாதிரியான மானிய முறையே பின்பற்றப்படுகிறது. என தெரிவித்தார்.

## திருப்பூர் மாநகராட்சி பத்தாவது வார்டில் அம்பேத்கார் நகரில் பட்டா கேட்டு பொதுமக்கள் முதல்வருக்கு கோரிக்கை



திருப்பூர், ஜூன் 15

திருப்பூர் மாநகராட்சி ஒண்ணாவது மண்டலம் பத்தாவது வார்டு ஆத்துப்பாளையம் அம்பேத்கர் நகர் பகுதியில் குடியிருக்கும் சுமார் 35 குடும்பங்கள் பட்டா இல்லாமல் தவிக்கின்றனர்ட் பட்டா கேட்டு பலமுறை மனுக்கள் கொடுத்தும் பட்டாக்கள் கிடைக்கவில்லை என்றும் இந்தப் பகுதியில் உள்ள வீடுகள் இடிக்கப்படும் என்றும் கேள்விப்படுகிறோம் என்றும் அந்தப் பகுதியில் உள்ள மக்கள் மிகவும் வேதனையுடன் கூறுகின்றனர் தற்போது புதிய அரசு அமைந்துள்ள நிலையில் தங்களுக்கு பட்டாக்கள் வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தது உள்ளதாகவும் அதிகாரிகள் வந்து ஆய்வுக்கு வந்ததாகவும் தெரிவித்தனர்

மேலும் குழந்தைகளு டன் மிகவும் ஏழ்மையான நிலைமையில் உள்ள எங்களுக்கு காலம் தாமதம் செய்யாமல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் மாவட்ட நிர்வாகம் மூலமாக எங்களுக்கு உடனடியாக பட்டா கொடுக்க வேண்டும் என்றும் இங்கு வீடுகள் இடிக்கப்பட்டால் எங்களுக்கு வேறு மாற்று இடத்தில் வீடுகளாக அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று இங்கு குடியிருக்கும் பொதுமக்கள் கண்ணீருடன் கூறுகின்றனர்

## நவசமாஜ் சேரிட்டபிள் சொசைட்டி பாராட்டு விழா



கிருஷ்ணகிரி மாவட்டம் 10th மற்றும் 12th தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டுவிழாவில் சான்றிதழ் மற்றும் பரிசுகள்வழங்கசிறப்புவிருந்தினராககிருஷ்ணகிரி சட்டமன்றத். உறுப்பினர் .பி. முகுந்தன்.MLA கலந்து கொண்டனர்

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது. முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# வேலூரில் அசோக் ஹோம் பர்னிஷிங் ஷோரூம் திறப்பு விழா



வேலூர், ஜூன் 15

வேலூர் பெருமுகையில் அசோக் ஹோம் பர்னிஷிங் ஷோரூம் (வீட்டு உள் அலங்காரப் பொருட்கள்) திறப்பு விழா உரிமையாளர்பவர்லால்அசோக்ஆதர்ஷ் கவுரவ் கர்னாவட் தலைமையில் நடைபெற்றது.

வேலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.வினோத்கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். கவுரவ விருந்தினர்களாக ஜவரிலால் ஜெயின் (அம்பாலால் குரூப்ஸ்), பாபி பெனடிக்ட் (பி அண்ட் பி பில்டர்ஸ்) பங்கேற்று வாழ்த்து தெரிவித்தனர்.

இதில் அவரது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இங்கு வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு , புதிய, பிரத்யேகமான அலங்காரப் பொருட்கள் வாடிக்கையாளர்கள்கனவுகளை நிறைவேற்றும் வகையில் தரமாக செய்து தரப்படும் என தெரிவித்துள்ளனர்.



# தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா

தென்காசி, ஜூன்.15

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதிக்கான சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திராவிட முன்னேற்றக் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் கலை கதிரவன், தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன் ஆகியோர் ரிப்பன் வெட்டி , குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தனர். மிகவும் சிறப்பாக நடைபெற்ற சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழாவில் இறுதியாக சட்டமன்ற உறுப்பினர் கலை கதிரவன் பத்திரிக்கையாளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார் பின்னர் பத்திரிக்கையாளர்களிடம் பேசுகையில் தென்காசி சட்டமன்ற தொகுதி மக்களுக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும் பாலமாக இருந்து தொகுதியின் பிரச்சனைகளை தன்னிடம் தெரிவிக்க வேண்டும் என்று பத்திரிகையாளர்களிடம் கேட்டுக் கொண்டார் சட்டமன்ற உறுப்பினர் அலுவலக திறப்பு விழாவில் முன்னாள் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சிவ பத்மநாதன், முன்னாள் வடக்கு மாவட்ட திமுக செயலாளர் செல்லத்துரை , தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார், தென்காசி மாவட்ட துணை செயலாளர் கனிமொழி மற்றும் திமுகவைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர். கே .கே . கோகுல் அவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி சென்னை பனையூர் தமிழக வெற்றிக் கழக அலுவலகத்தில் தவெக பொதுச்செயலாளர் அமைச்சர் ஆனந்த் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா மற்றும் அமைச்சர் பார்த்திபன் ஆகியோர் முன்னிலையில் தவெகவில் இணைந்தார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி மொடக்குறிச்சி, பத்தையம்பாளைத்தில் சி.எஸ்.ஐ நிதியுதவி துவக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

## குமரியில்

# கோதையாறு பகுதிக்கு செல்ல சுற்றுலா பயணிகளுக்கு தடை

## பழங்குடியின மக்கள், ரப்பர் தொழிலாளர்கள் செல்ல மட்டும் அனுமதி



மார்த்தாண்டம், ஜூன். 15

குமரி மாவட்டத்தில் மலையோர பகுதியில் உள்ள கோதையாறு சிறந்த சுற்றுலாத்தலமாகும். மிக அடர்ந்த வனப்பகுதிகளைகொண்ட இந்தபகுதியைபல்லுயிரின வன சரணாலய பகுதியாக அறிவித்து பாதுகாத்து வருகிறது. இங்கு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வந்து செல்வது வழக்கம். இங்கு கோடைகாலத்தில் குமரி மாவட்டம் மட்டுமின்றி தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

மேலும் கோதையாறு மலைப்பகுதியில் மான், மிளா, காட்டுப்பன்றி, யானை, சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகள்வசித்துவருகின்றன.மேலும்முண்டந்துறை வனச்சரகத்தை ஒட்டி கோதையாறு அமைந்துள்ளதால் இங்கு புலிகளும் வாழ்ந்து வருகின்றன. கோதையத்தில் அரசு ரப்பர் தோட்டம், 2 நீர்மின் நிலையங்கள் உள்ளன. இங்குள்ள குடியிருப்புகளில் பழங்குடியின மக்கள் அதிக அளவில் வசித்து வருகிறார்கள்.

வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள போதையாறு வனப் பகுதிக்கு செல்வதற்கு பேச்சிப்பாறை ஜீரோ பாயிண்ட் பகுதியில் உள்ள வன சோதனை சாவடி அருகே உள்ள இடத்தில் அனுமதி சீட்டு கண்டிப்பாக பெற்ற பின் தான் உள்ளே செல்ல முடியும்.

இங்கு காரை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டும் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள். இந்த நிலையில் குமரியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழைபெய்துவருவதால்,மலையில்உள்ளநீரோடைகள் மற்றும் சிறிய ஆறுகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு, கோதை ஆற்றில் நீர் பிடிப்பு பகுதியாக கொண்ட பேச்சிப்பாறை அணைக்கு அதிக அளவில் தண்ணீர் வருகிறது.

இதற்கிடையே கோதையாற்று பகுதியில் சமீபகரமாக அதிக அளவில் யானைகள் நடமாட்டம் இருந்து வருகிறது. இதனால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்பு பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதியில் நுழைந்த காட்டு யானைகள் மக்கள் வைத்திருந்த உணவுப் பொருட்களை தின்றுவிட்டு சென்றன.

இந்த நிலையில் தொடர் மழை மற்று யானைகள் நடமாட்டம் காரணமாக கோதையாறு வனப்பகுதிக்கு செல்ல சுற்றுலா பகுதிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஜீரோ பாயிண்டில் டிக்கெட் வழங்கும் இடம் மூடப்பட்டுள்ளது. ஆனால் அரசு ரப்பர் தோட்ட தொழிலாளர்கள் மற்றும் பழங்குடியின மக்கள் வழக்கம் போல் சென்று வர அனுமதி உண்டு என்று வனத்துறையினர் தெரிவித்தனர். மழை நின்று, தண்ணீர் பெருக்கு குறைந்து, யானைகள் நடமாட்டம் குறைந்த பின்பு சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக முதல்வர் பிறந்தநாளினை முன்னிட்டு

# மத்திய மாவட்ட தவெக சார்பில் மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம்



கிருஷ்ணகிரி ஜூன் 15:

தமிழக வெற்றி கழக பொதுச் செயலாளர் ஆனந்தின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி மத்திய மாவட்டத்தின் சார்பில்தமிழகமுதல்வர்ஜோசப்விஜய்ன்பிறந்தநாளினை முன்னிட்டு மாபெரும் தனியார் வேலை வாய்ப்பு முகாம் நடைப்பெற்றது. கிருஷ்ணகிரி டான்சி வளாகத்தில் அமைந்துள்ள தவெக மத்திய மாவட்ட அலுவலகம் அருகில்நடைப்பெற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமினை மத்திய மாவட்ட செயலாளர் சுரேஷ் மற்றும் மோற்கு மாவட்ட செயலாளர் வடிவேல் ஆகியோர் குத்து விளக்கு ஏற்றி துவக்கிவைத்தனர்.

மேலும் இந்த வேலை வாய்ப்பு முகாமில் டாடா, டிவிஸ், அசோக் லைலண்ட் உள்ளிட்ட தமிழகத்தின் முன்னனி நிறுவனங்களில் இருக்கு சுமார் 51 நிறுவனங்கள் கலந்துக் கொண்டு தங்களுக்கு தேவையான தகுதியான நபர்களை தேர்வு செய்தனர். தமிழக முதல்வரின் பிறந்த நாளினை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்த வேலை வாய்ப்பு முகாமில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான படித்த இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துக்கொண்டு பயன்பெற்றனர்'. இந்நிகழ்ச்சியில், கழக மாவட்ட இணை செயலாளர் மகேந்திரன், பொருளாளர் முருகேசன், செயற்குழு உறுப்பினர் ரத்தினவேல், மாணவரணி அமைப்பாளர் அருள்குமார், உறுப்பினர் சேர்க்கை அணி அமைப்பாளர் பிரகாஷ், இணை அமைப்பாளர் சிபி சச்சின், மருத்துவர் அணி பார்த்திபன், கழக நிர்வாகிகள் தென்னரசு, வேலன், மகளிர் அணி இந்திராநாகராஜ், மகேஸ்வரி, நேத்ரா, சுமதி, கீர்த்தனா , வினோதினி, வேப்பனப்பள்ளி ஒன்றிய செயலாளர் நாகராஜன், ஒன்றிய இணை செயலாளர் ரமேஷ், சூளகிரி ஒன்றிய செயலாளர்கள் திம்மராஜ், பசுவராஜ், பார்த்தசாரதி, தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகி மகேந்திரன், ராஜு, ஹரிபிரசாத் கிருஷ்ணகிரி நகர கழக நிர்வாகிகள் சரவணன், ரேணுகுமார், ஜெய் ஆனந்த், ஏஜாஸ், முஹமத் ஷபீர், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி மாவட்ட நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் தமிழக வெற்றிக்கழக சார்பில் நடைபெற்ற இந்த தனியார் வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டார்கள்.



வேலூர் விலையில்லா விருந்தகத்தின் 2000 வது நாளையொட்டி தவெக வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர்.வேல்முருகன் தலைமையில், கிழக்கு மாவட்ட செயலாளர் ஆ.நவீன் முன்னிலையில் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வேலூர் மாவட்டத்திற்கு பொறுப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் விஜய் பாலாஜி மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் தென்னரசு ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு உணவை வழங்கினர். இதில் மாவட்ட இணை செயலாளர் எம்.சீனிவாசன், பொருளாளர் பிரசாந்த் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# அ.தி.மு.க பேனர் கிழிக்கப் பட்டதால் மாவட்ட செயலாளர் ஆவேசம்

## அதிகாரிகளுடன் வாக்குவாதம்

ஈரோடு ஜூன் 15

ஈரோடு மாநகராட்சி பகுதியில் பொது மக்களுக்கு இடையூறாக உள்ள சாலையோர ஆக்கிரமிப்புகளை மாநகராட்சி அதிகாரிகள் ஊழியர்கள் கடந்த சில நாட்களாக அகற்றி வருகிறார்கள். பன்னீர்செல்வம் பார்க் அருகே ஊர்க் காவல் படை அலுவலகம் அருகே த வெ க கட்சியின் பிளக்ஸ்போர்டு வைக்கப் பட்டு இருந்தது. இதை மாநகராட்சி ஊழியர்கள் மாநகராட்சி ஊழியர்கள் எந்த சேதாரமும் இல்லாமல் பாதுகாப்பாக கழற்றி சுவரில் சாய்த்து வைத்ததாக கூறப்படுகிறது.

அதே நேரத்தில் தீயணைப்பு நிலையம் எதிரே அதிமுக சார்பில் சாலை ஓரமாக வைக்கப்பட்டுஇருந்தபிளக்ஸ்போர்டை மாநகராட்சி ஊழியர்கள் தூணுடன் உடைத்து அகற்றி சாலையோரத்தில் வைத்தனர். இதனால் அதிமுக பிளக்ஸ் போர்டு சேதம் அடைந்தது. இது பற்றி தகவல் கிடைத்ததும் ஈரோடு மாநகர மாவட்ட அதிமுக செயலாளர் பெரியார் நகர் மனோகரன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தார். தனது கண் முன்பே அதிமுக பெயர் பலகையை சேதப்படுத்தி அகற்றியதை பார்த்த அவர் ஆவேசம் அடைந்தார். இதுபற்றி அவர் மாநகராட்சி அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். தவெக கட்சி பேனரை சேதம் இல்லாமல் அவிழ்த்து வைக்கிறீர்கள். ஆனால் அதிமுக பேனரை உடைத்து அகற்றுவீர்களா ஏன் பாரபட்சமாக நடந்து கொள்கிறீர்கள் உங்களுக்கு யார் இந்த அதிகாரத்தை கொடுத்தது என்று கேட்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. இதுபற்றி தகவல் அறிந்ததும் ஈரோடு டவுன் டி எஸ் பி முத்து குமார் சம்பவ இடத்திற்கு வந்து சமாதானப்படுத்தினார். சம்பவ இடத்தில் ஏராளமான அதிமுக வினர் மற்றும் பொது மக்கள் கூடியதால் சிறிது நேரம் பரபரப்பான சூழ்நிலை காணப்பட்டது.



# ஈரோட்டில் பறிமுதல் செய்யப்பட்ட 510 கிலோ புகையிலை பொருட்கள் அழிப்பு

ஈரோடு ஜூன் 15

தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட குட்கா, பான்பராக், கூல் லிப், ஹான்ஸ் போன்ற புகையிலை ப்பொருட்களை, காவல்துறையினர், உணவு பாதுகாப்பு துறையினர், உள்ளாட்சித்துறையினர், சுகாதாரத்துறை அலுவலர்கள் கூட்டாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, தடையை மீறி விற்பனை செய்யும் கடைகள் மூடப்பட்டு அபராதமும் விதிக்கப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு காவல் நிலையம் சரகத்திற்குட்பட்ட கடந்த ஜனவரி மாதம் முதல் இது நாள் வரையுள்ள ஈரோடு நகர காவல் துறை, மற்றும் உணவு பாதுகாப்புத்துறையால் கைப்பற்றப்பட்ட 488 கிலோ, இரயில்வே காவல்துறையனரால் கைப்பற்றப்பட்டு ஒப்படைக்கப்பட்ட 22கிலோ எடையுள்ள மொத்தம் 510 கிலோ தமிழ்நாடு அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் ஈரோடு மாநகராட்சி வெண்டிபாளையம் குப்பைக்கிடங்கில் மாவட்ட தமிழக அரசால் தடைசெய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள்அழிப்புக் குழுவினரான நியமன அலுவலர், உணவு பாதுகாப்புத் துறை காவல்துறை, உள்ளாட்சித்துறை, பொது சுகாதாரத்துறை, வருவாய் துறை ஆகியோரின் முன்னிலையில் புகையிலைப்பொருட்கள் மீண்டும் பயன்படுத்த இயலாத வகையில் சேதப்படுத்தப்பட்டு 10 அடி ஆழம் குழிதோண்டிப் புதைத்து முற்றிலும் அழிக்கப்பட்டன.

தடை செய்யப்பட்ட புகையிலைப்பொருட்கள்அழிப்பு நடவடிக்கையில் மாவட்ட நியமன அலுவலர் டாக்டர். வரலட்சுமி, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் கேசவராஜ், செல்வன், எம்.

முத்துகிஷ்ணன் மற்றும் மாவட்ட புகையிலை தடுப்பு ஆலோசகர் கலைச்செல்வி, துப்புரவு ஆய்வாளர் கோகுல், கிராம நிர்வாக அலுவலர் சரவணன், மொடக்குறிச்சி காவல் ஆய்வாளர் ரவிக்குமார் கலநது கொண்டனர்.

# தேரூர் பாசன வாய்க்காலில் இடிந்து விழுந்த ரயில்வே பக்கச்சுவர்; சீரமைக்க கோரிக்கை



நாகர்கோவில், ஜூன்.15

குமரி மாவட்ட நீர்வளத்துறையின் நாகர்கோவில் பாசனபிரிவு உதவிப்பொறியாளர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள தேரூர் கிராமத்தில் தண்டநாயக்கன்குளம் உள்ளது. இந்த குளத்தின் மடையிலிருந்து அந்த குளப்புரவிற்கும், தத்தையார்குளத்திற்கும் கோதைகிராமம் ஊர் வழியாக பாசனத்திற்கு தண்ணீர் செல்லும் வாய்க்கால் உள்ளது. நாஞ்சில்நாடு புத்தனார் கால்வாய் தண்ணீரும் இந்த வாய்க்கால் வழியாகத்தான் பாசனத்திற்கு செல்கிறது.

இந்தநிலையில்புதுக்கிராமம்ரயில்வே கேட்டை ஒட்டி ரயில்வேத் துறையால் பக்க சுவர் கட்டப்பட்டிருந்தது. தற்போதைய கன மழையால் பக்கச்சுவர் முழுமையாக சரிந்து விழுந்து, வாய்க்காலில் தண்ணீர் போக்கிற்கு இடையூறாக கிடக்கிறது.

இதன் காரணமாக கடந்த ஒரு வாரகாலமாக விவசாய பகுதிக்கு தண்ணீர் செல்ல முடியாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மேல்பகுதியில் தண்ணீர் தேங்கி அப்பகுதி விளைநிலங்கள் சதுப்புநிலமாக மாறி வருகின்றன.

எனவே நீர்வளத்துறை அதிகாரிகள் உடனடியாக இடிந்து விழுந்த கட்டுமானங்களை அகற்றி தண்ணீர் வடிய ஏற்பாடு செய்ய வேண்டும். ரயில்வேத்துறையினர் பக்கச்சுவரை முழுமையாக அகற்றி மீண்டும் உறுதியுடன் பக்க சுவர் கட்ட வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

## சவுக்கு சங்கர் குற்றச்சாட்டுகளுக்கு

# லட்சிய ஜனநாயக கட்சியின் மாநில பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா திருப்பூரில் நடைபெற்றஆலோசனைக் கூட்டத்தில் மறுப்பு



திருப்பூர்: ஜூன் 15

திருப்பூரில் லட்சிய ஜனநாயகக் கட்சியின் புதிய நிர்வாகிகள் கலந்தாய்வுக் கூட்டம் யுனிவர்சல் திரையரங்கு அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கட்சியின் நிறுவனத் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் வீடியோ கால் மூலம் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றி புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து உரையாற்றினார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த நெல்லை ஜீவா, கட்சி தொடங்கப்பட்ட சில நாட்களிலேயே எந்தவித விளம்பரமும் இன்றி இணையதளம் மூலமாக மட்டும் சுமார் 4 லட்சம் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், புதுச்சேரியை சிங்கப்பூருக்கு இணையான மாநிலமாக மாற்றும் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், வரும் உள்ளாட்சித் தேர்தலில் கட்சியின் கட்டமைப்பை பலப்படுத்தி அனைத்து பகுதிகளிலும் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார். தொடர்ந்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர், சவுக்கு சங்கர் முன்வைத்த குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்தார். சவுக்கு சங்கர் கூறிய குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானவை என்றும், கட்சியுடன் எந்தவித பணப் பரிவர்த்தனை அல்லது மிரட்டல் சம்பவங்களும் தொடர்புபடுத்தப்பட முடியாது என்றும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் நெல்லை ஜீவா, மாநில நிர்வாகி டாக்டர் பூபதி, கண்ணன், தமிழழகு, குமரேசன், விஜய் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.




## தஞ்சாவூர்

# தமிழ் பல்கலைக்கழகத்தில் முதுகலை முதலாம் ஆண்டு மாணவர் சேர்க்கை தொடக்கம்

தஞ்சாவூர் ஜூன் 15

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பல்வேறு மாவட்டங்களில் உள்ள ஏழை, எளிய கிராமப்புற மாணவர் கள் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்ட ஒருங்கிணைந்த முதுகலை முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான சேர்க்கை இலக்கிய துறையில் தொடங்கப் பட்டது

துணைவேந்தர் பொறுப்புக் குழு உறுப்பினர் பாரத ஜோதி, தலைமை யில் பதிவாளர் (பொறுப்பு) பன்னீர் செல்வம் முன்னிலையில் தொடங்கப்பட்டது

இதில் இலக்கியத்துறை தலைவர் தேவி, பேராசிரியர் இளையாப்பிள்ளை, தொழில் மற்றும் நில அறிவியல் துறை பேராசிரியர் சங்கர், கல்வியல் மற்றும் மேலாண்மை இயல் துறை தலைவர் சின்னப்பன், பேராசிரி யை தனலட்சுமி, மொழிபெயர்ப்பு துறை தலைவரும், மக்கள் தொடர்பு அலுவலருமான முருகன், சேர்க்கை பிரிவு அலுவலர் நிலை பணியாளர் கள் கயல்விழி, அமுதா, மணிகண் டன் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்



## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# தேசிய மக்கள் நீதிமன்றத்தில் ஒரே நாளில் 2,056 வழக்குகளில் ரூபாய் 13.03 கோடி தேர்வு

தஞ்சாவூர் ஜூன் 15

தஞ்சாவூர் மாவட்டத்தில் நடந்த தேசிய மக்கள் நீதிமன்றத்தில் ஒரே நாளில் 2,056 வழக்குகளில் ரூபாய் 13.03 கோடி அளவிற்கு தீர்வு காணப் பட்டு வழக்காடுகளுக்கு பெற்றுத் தரப்பட்டது

தஞ்சாவூர் மாவட்ட ஒருங்கிணை ந்த கோர்ட்டு மற்றும் மாவட்டத்தில் உள்ள கீழமை கோர்ட்டுகளின் நிலுவையில் உள்ள வழக்குகளை சமரசமாக பேசி தீர்வு காண்பதற் காக தேசிய அளவிலான சிறப்பு மக்கள் நீதிமன்றம் நடந்தது

இந்த நிகழ்ச்சியில் முதன்மை மாவட்ட நீதிபதியும் (பொறுப்பு) மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழு தலைவருமான தமிழரசி தலைமை தாங்கினார்.

மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரும் தீர்ப்பாய சிறப்பு மாவட்ட நீதிபதி அமிர்த வேலு, குற்றவியல் நீதித் துறை நடுவர் வனிதா ,வழக்கறிஞர் திராவிட செல்வன் ஆகியோர் கொண்ட முதலாவது அமர்வில் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு வழக்கு களுக்கு தீர்வு காணப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி குமார், குற்றவியல் நீதித்துறை நடுவர் ராஜேஸ் கண்ணன் ,வழக்கறிஞர் மகாலட்சுமி ஆகியோர் கொண்ட இரண்டாவது அமர்வில் உரிமை யியல் மற்றும் குற்றவியல் வழக்கு களுக்கு தீர்வு காணப்பட்டது.

இவற்றுடன் கும்பகோணம், பாபநாசம், பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, பேராவூரணி, திருவிடைமருதூர், திருவையாறு ஆகிய வட்ட சட்டப்பணிகள் குழு வின் அமர்வுகளிலும் விசாரணை நடத்தப்பட்டது இவற்றின் மூலம் மாவட்டத்தில் மொத்தம் 5398 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 2,056 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு, ரூபாய் 13 கோடியே 3, இலட்சத்து96 ஆயிரத்து 657 அளவு க்கு தீர்வு தொகை வழக்காடிகளுக் கு பெற்று தரப்பட்டது இதில் சென்னையில் தனியார் நிறுவனத்தின் மென்பொருள் பொறியாளராக பணி புரிந்த விபத்தில் உயிரிழந்த தினேஷ் குமாரின் குடும்பத்திற்கு வழக்கு பதிவு செய்யப்பட்ட 14 மாதங்களுக் குள் இழப்பீடு தொகையாக ரூபாய் 3 கோடி வழங்க உத்தரவிடப்பட்டது இந்த இழப்பீட்டுக்கான உத்தரவை ப் பெற்ற பாதிக்கப்பட்ட குடும்பத்தி னர் விரைவாக நீதி வழங்கிய நீதிபதிகளுக்கும், தேசிய மக்கள் நீதிமன்றத்தை நடத்தும் சட்டப்பணிகள் ஆணைக்குழுவுக்கும் நன்றி தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளரும் சார்பு நீதிபதியுமான பாரதி ,தஞ்சாவூர் வழக்கறிஞர் சங்க தலைவர் ஜீவக்குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்



## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் பல்வேறு பணிகள்: அமைச்சர்கள் ஆய்வு

தஞ்சாவூர் ஜூன் 14

தஞ்சாவூர் மாவட்டத்தில் நுகர்வோர பொருள்வாலிபக் கழகத்தின் சார்பில் பல்வேறு பணிகளை உணவுத்துறை அமைச்சர்வெங்கட்ரமணன், வேளாண் துறைஅமைச்சர்வினோத்ரவி மாவட்ட கலெக்டர் ரேவதி ,விஜய் சரவணன் எம் எல்ஏ ஆகியோர் ஆய்வு செய்தனர்

தஞ்சாவூர்அடுத்துள்ள அம்மன் பேட்டை நவீன அரிசி ஆலை, நீலகிரி தெற்கு தோட்டத்தில் உள்ள பொது விநியோகத்திட்ட சேமிப்பு கிடங்கு ,தஞ்சாவூர் கூட்டுறவு காலணியில் உள்ள பண்பொருள் அங்காடி ஆகிய வற்றில் அமை ச்சர் வெங்கட்ரவணன் ஆய்வு செய்தார் மேலும் பிள்ளையார்பட்டியில் உள்ள சேமிப்பு கிடங்கு, மருங்குளம் நெல் கொள்முதல் நிலையம், நடுவூரில் கட்டப்படும் சேமிப்புக் கிடங்கு ஆகியவற்றையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

தஞ்சாவூரில் ஆய்வு மேற் கொண்ட உணவுத்துறை அமைச்சர் வெங்கட்ரமணன் செய்தியாளர் களிடம் கூறியதாவது:

கடந்த சில நாட்களாக டெல்டா மாவட்டங்களில் ஆய்வு செய்து வருகின்றேன். இதில் சேமிப்பு கிடங்குகளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.50 லட்சம் டன் நெல் மூட்டைகள், மயிலாடுதுறையில் 1.90 லட்சம் டன் ,நாகையில் 1.70 டன் நெல் மூட்டைகள் இருப்பில் உள்ளன. கடந்த கால ஆட்சியில்தவறான நிர்வாகத்தால் நெல் மூட்டைகள் தேங்கியுள்ளது. இது குறித்து ஒரிரு நாட்களில் அனைத்து மாவட்டங்களிலும் அறிக்கை பெறப் பட்டு, இந்த நெல் மூட்டைகள் அரவை செய்ய உரிய நடவடிக்கை எடுக் கப்படும்

கடந்த ஆட்சி காலத்தில் ரூபாய் 40 விவசாயிகளிடம் வாங்கி உள்ளனர் ஏதாவது ஒரு சூழ்நிலைக்காக அந்த பணம் வாங்கப்பட்டு வந்துள்ளது. ஊழியர்கள் அல்லாத நபர்கள் தான் ஒவ்வொரு மாவட்டத்திற்கு ஏற்ப ரூபாய் 40 ,ரூபாய் 50, ரூபாய் 60 என வாங்கி வருகிறார்கள். அந்த ஊழல் இனி எந்த சூழலிலும் நடக்காது. த. வெ. க. ஆட்சிக்கு வந்த பிறகு ஊழல் தடுக்கப்பட்டுள்ளது.குறுவை சாகுபடியில் விவசாயிகள் பாதிக் கப்படக்கூடாது, என்பதற்காக தமிழக முதல்வர் முதலமைச்சர் குறுவை தொகுப்பு திட்டத்தை அறிவித்துள்ளார். கடந்த ஆட்சி காலத்தில் நெல் மூட்டைகளை இயக்கம் செய்ய5 பேருக்கு மட்டும் தான் டிரான்ஸ்போர்ட் தொடர்பான ஒப்பந்தம் கொடுத்துள்ளனர். அந்த ஒப்பந்தம் வருகிற 30ஆம் தேதி உடன் முடியும் .புதிய ஒப்பந்தம் வழங்கும் முன்பு 5 பேருக்கு மட்டுமா அல்லது 39 மாவட்டங்களுக்கும் ஒப்பந்தத்தை மாவட்ட அளவில் பிரித்து வழங்குவதாக என முடிவு செய்ய உள்ளோம்.

தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் ஆய்வுக்கு சென்று வருகின்றேன். விவசாயிகள் போராட்டம் கண்ணுக்கு தெரிந்த அளவு இல்லை .

இந்த ஆட்சியில் போராட்டம் கிடையாது. தமிழகத் தில் இந்த கொள்முதல் பருவத்தில் சுமார் 65 லட்சம் டன் நெல் கொள் முதல் செய்யப்படும் என எதிர் பார் க்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்

ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன் நுகர்பொருள் வாணிப கழகம் முதுநிலை மண்டல மேலாளர் செல்வம், வருவாய் கோட்டாட்சியர் நித்யா ,தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக செயற்பொறியாளர் முருகன், தரகட்டுப்பாட்டு அலுவலர் சக்தி, துணை மேலாளர் கள் இளங்கோவன், வெற்றிச் செல்வன் ,வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு )சாருமதி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் சாமுவேல் மற்றும் பலர் உடன் இருந்தனர்

## ஒழுகினசேரி சந்திப்பில்

# ரயில்வே கட்டிடம் நள்ளிரவில் இடிப்பு: கலெக்டர் அதிரடி உத்தரவு

நாகர்கோவில், ஜூன்.15

நாகர்கோவில் மாநகராட்சியின் நுழைவு பகுதியாக ஒழுகினசேரி உள்ளது. தமிழகத்தின் பல்வேறு பகுதியில் இருந்துநாகர்கோவிலுக்குவரும்அனைத்துவாகனங்களும் இந்த வழியாகத்தான் வரவேண்டும். ஒழுகினர் சரி சந்திப்பில் பழையாற்றில் நெடுஞ்சாலை துறை மேம்பாலமும், அதன் அருகில் ரயில்வே பாலமும் அமைந்துள்ளது. தற்போது கன்னியாகுமரி திருவனந்தபுரம் இடையிலான இரட்டை ரயில் பாதை பணிகள் நடப்பதால் ஒழுகினசேரி பகுதியில் பழைய ரயில் பாலம் இடிக்கப்பட்டது. புதிய பாலம் அமைத்து சுமார் 2 ஆண்டுகள் ஆகியும் இன்னும் பணிகள் நிறைவு அடையவில்லை. இதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. எனவே புதிய பல பணியை விரைந்து முடித்து போக்குவரத்தை அனுமதிக்க வேண்டுமென கோரிக்கை எழுந்தது. புதிய பால பணி தற்போது 60 சதவீதம் வரை பணி முடிவடைந்துள்ளது. 40 சதவீதப் பணிகள் இணைப்பு சாலைகள் சீரமைக்கப்பட வேண்டும். இதற்கு போக்குவரத்தை மாற்றி அமைக்க அமைப்பதற்காக சாலை வசதிகள் போதுமானதாக இல்லை. எனவே ஒழுகினசேரி சந்திப்பு வரும் வாகனங்களை மாற்றிவிட்டு பாலத்தின் பக்கவாட்டு பணிகளை முடிக்க முடிவு செய்துள்ளனர். இது குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்க காவல்துறைக்கு கலெக்டர் பிரதாப் உத்தரவிட்டார்.

இதற்கிடையே ஒழுகினசேரி சந்திப்பில் பல ஆண்டுகளாக பயனற்ற நிலையில் ரயில்வே கட்டிடம் உள்ளது. இந்த கட்டிடத்தை அகற்றினால் ஓரளவு நெருக்கடி சமாளிக்கும் வகையில் தற்காலிக பாதை அமைக்க முடியும் என காவல்துறை அறிவுறுத்தியது. இத எடுத்து கலெக்டர் பிரதாப் ஆய்வு செய்து ரயில்வேக்கு கோரிக்கை வைத்தார். ரயில்வே அதிகாரிகள் கட்டிடத்தை இடிப்பதால் எந்த பிரச்சனையும் இல்லை என்று தெரிவித்தனர். இது தொடர்பாக கடிதம் அளித்துள்ளனர்.

இதையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு பல ஆண்டுகளாக இருந்த ரயில்வே கட்டம் அகற்றப்பட்டது. இந்த கட்டிடம் ஒரு காலத்தில் ரயில்வே குடியிருப்பாக இருந்ததாக கூறப்படுகிறது. கட்டிடம் அகற்றப்பட்டதால் உடனடி தற்காலிக சாலை அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர்கள் பணி மாறுதல் கலந்தாய்வு வெளிப்படையாக நடக்க வேண்டும்

## தமிழக ஆசிரியர் கூட்டணி வலியுறுத்தல்.



விளாத்திகுளம் ஜூன் 15.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் தனியார் திருமண மண்டபத்தில் தமிழக ஆசிரியர் கூட்டணி விளாத்திகுளம் வட்டார கிளையின் ஆண்டு விழா, பணி நிறைவு பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா மற்றும் விருது பெற்ற ஆசிரியர்களுக்கும் பள்ளிகளுக்கும், 25 ஆண்டுகள் பணியை முடித்துள்ள ஆசிரியர்களுக்கும் பாராட்டு விழா என முப்பெரும் விழா விமர்சையாக நடைபெற்றது. விழாவிற்கு ஐபெட்டோ அகில இந்திய செயலாளர் அண்ணாமலை தலைமை வகித்தார். இதில் தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து அரசுப்பள்ளி ஆசிரியர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் பணி நிறைவு பெற்ற ஆசிரிய பெருமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் கலந்து கொண்ட பணி நிறைவு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் விருது பெற்ற ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இவ்விழாவில் தமிழக ஆசிரியர் கூட்டணி விலாதிகளும் வட்டாரத் தலைவர் சேர்மக்கனி, வட்டாரச் செயலாளர் முத்துப்பாண்டி, வட்டாரப் பொருளாளர் அருண் உள்ளிட்டோர் தலைமையில் ஏராளமான தமிழக ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்த ஆசிரியர்கள் பங்கேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஐபெட்டோ அகில இந்திய செயலாளர் அண்ணாமலை தமிழக ஆசிரியர்களின் பணி மாறுதல் கலந்தாய்வு எந்தவித ஊழல் இன்றி வெளிப்படையாகவும், நேர்மையான முறையில் நடத்திட த.வெ.க அரசுக்கு தமிழக ஆசிரியர் கூட்டணி சார்பில் வலியுறுத்தினார். அதுமட்டுமின்றி கடந்த ஆட்சியாளர்களிடம் ஆசிரியர்கள் சார்பில் வைக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# புதூரில் டாஸ்மாக் கடையை மூடக்கோரி பொதுமக்கள் போராட்டம்



விளாத்திகுளம் ஜூன் 15.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள புதூரில், புதூர் பரளச்சி செல்லும் சாலையில் பார் வசதியுடன் செயல்பட்டு வரும் அரசு மதுபானக் கடை பொது மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதிக்கு அருகில் அமைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள மக்கள் இந்த டாஸ்மாக் கடையை மூடக்கோரி நீண்ட காலமாக கோரிக்கை வைத்து வருகின்றனர். இந்நிலையில் டாஸ்மாக் கடைக்கு அருகில் உள்ள பகுதியில் வசிக்கும் குடியிருப்பு வாசிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் இன்று இந்த அரசு மதுபான கடையை மூட வலியுறுத்தி டாஸ்மாக் கடையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட முயன்றனர். ஆனால் அங்கு வந்த புதூர் காவல் நிலைய போலீசார் போராட்டத்தில் ஈடுபட முயன்றவர்களை தடுத்து நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, பொதுமக்கள் காவல்துறையினரிடம் இந்த அரசு மதுபானக் கடையினால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து எடுத்துரைத்து உடனடியாக கடையை மூட வழிவகை செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டனர். பின்னர் போலீசார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி 10 நாட்களில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட முயன்ற மக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



# மாறாமலையில் யானை தாக்கி காயம் அடைந்தவரை அமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல்

நாகர்கோவில், ஜூன்.15

அழகிய பாண்டியபுரம் வனச்சரகத்திற்குட்பட்ட மாறாமலை பகுதியில் யானைத்தாக்கி ஆசாரிபள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ரவி என்பவரை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார், பத்மநாபபரம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.செல்லசுவாமி, மாவட்ட வன அலுவலர் அன்பு, ஆகியோர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவித்தொகை வழங்கினர். பின்னர் அமைச்சர் கூறியதாவது:

அழகிய பாண்டியபுரம் வனச்சரகத்திற்குட்பட்ட கீரிப்பாறை அருகில் உள்ள மாறாமலை பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான எஸ்டேட்டில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்த ரவி (47) என்பவர் பணிபுரிந்து வருகிறார். நேற்று முன்தினம் வழக்கம்போல் எஸ்டேட்டில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது எதிர்பாராத விதமாக காட்டு யானை வந்து அவரை தாக்கியதில் வயிற்றுப்பகுதியில் காயம் ஏற்பட்டது.

உடனே அவரை பூதப்பாண்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்து சிகிச்சை மேற்கொண்டு வந்தார். தற்போது மேற்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவரின் தொடர் கண்காணிப்பில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றதன் அடிப்படையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.59,100 அவர்களின் குடும்பத்தாரிடம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து வனச்சரகத்திற்குட்பட்ட பகுதிகளில் இது போன்ற யானை தாக்குதல் நடைபெற்று வருகிறது. வனத்திற்குட்பட்ட பகுதிகளில் மாவட்ட வனத்துறையினர் யானையின் வழித்தடங்களை அறிந்து அந்த பகுதிகளில் மின் வேலிகள் ஏற்கனவே அமைத்துள்ளார்கள். மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று போர்க்கால அடிப்படையில் அரசு சட்ட திட்டங்களுக்குட்பட்டு மற்ற பகுதிகளில் மின் வேலிகள் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.லியோ டேவிட், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. கிங்சிலின், உறைவிட மருத்துவர் மரு. விஜயலெட்சுமி, உதவி உறைவிட மருத்துவர் மரு.கலைக்குமார், மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தேமுதிக சார்பில் நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம்



கிருஷ்ணகிரி ஜூன் 15

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தேமுதிக சார்பில் தேர்தலுக்குப் பிந்தைய நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் கே. ஆர்.சின்னராஜ், மற்றும் மாவட்டக் கழக வைத் தலைவர் எல்.முருகன் ஆகியோர் தலைமையில் காவேரிப்பட்டினத்திலுள்ள கழக அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது சிறப்புரையாற்றிய மாவட்ட கழக செயலாளர் சின்னராஜ், கிழக்கு மாவட்டத்தில் உள்ள நிர்வாகிகள் பலர் தேர்தலில் கடுமையாக உழைத்ததாகவும், ஒரு சில நிர்வாகிகள் பதவியைப் பெற்றுக் கொண்டு கழகப் பணியில் செயல்பட தவறியதாகவும் குற்றம் சாட்டினார். அவ்வாறு செயல்படாதவர்கள் அடையாளம் கண்டு தலைமைக்கு தெரியப்படுத்த விருப்பதாகவும் பேசினார் மேலும் வருகிற 25, 26, 27, ஆகிய தேதிகளில் கழக நிறுவனத் தலைவரான கேப்டன் ஆலயத்தில் அன்னதானம் செய்ய இருப்பதாகவும், அதற்கு கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஒத்துழைப்பு தந்து அன்னதான நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் எதிர்வரும் காலங்களில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்தின் கரத்தை வலுப்படுத்த அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும் எனவும், நகர ஒன்றியங்களில் தீவிர உறுப்பினர் சேர்க்கை மற்றும் கழகக் கொடியினை பல்வேறு இடங்களில் ஏற்றி, பொது மக்களின் கோரிக்கை நிறைவேற்றிடவும், அதேபோல் ஆளுங்கட்சியின் தவறுகளை சுட்டிக் காட்டிடவும், நிர்வாகிகள் தவறாமல் கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டும் என கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் காவேரிப்பட்டினம் ஒன்றிய செயலாளர் விஜய் வல்லரசு வரவேற்பு உரையாற்றினார். செயற்குழு உறுப்பினர் ஏ. கே.வேலு, தலைமை செயற்குழு உறுப்பினர் காதர், கிருஷ்ணகிரி மத்திய ஒன்றிய செயலாளர் மாதேஷ், பர்கூர் தெற்கு ஒன்றிய செயலாளர் திருநாவுக்கரசு, ஊத்தங்கரை மத்திய ஒன்றிய செயலாளர் சதீஷ், போச்சம்பள்ளி தெற்கு ஒன்றிய செயலாளர் இளங்கோ, ஊத்தங்கரை பேரூராட்சி செயலாளர் துரை, காவேரிப்பட்டினம் ஒன்றிய துணை செயலாளர் பி.சி.குமார், காவேரிப்பட்டினம் கிழக்கு ஒன்றிய அவைத் தலைவர் சின்னையன், கிழக்கு ஒன்றிய துணை செயலாளர் சக்தி முன்னாள் பொருளாளர் முருகேசன், போஸ், அத்திகானூர் அருண், உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர் இறுதியில் காவேரிப்பட்டினம் நகர கழகச் செயலாளர் கே.எஸ்.அன்வர் நன்றி உரையாற்றினார்.



திருப்பத்தூர் மாவட்டத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு அரசு வனத்துறை அமைச்சர் R.V.ரஞ்சித்குமாரிடம் தின தமிழ் நாளிதழை மாவட்ட செய்தியாளர் செ.ரஜினி எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.,பி.எச்.டி., வழங்கினார். நாளிதழை வழங்கும்போது திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் திருப்பதி அமைச்சருடன் இருந்தது குறிப்பிடத்தக்கது.

### உலக இரத்தக் கொடையாளர்கள் தினத்தில்

# இரத்ததானம் வழங்கிய அரசுப்பள்ளி ஆசிரியர் குடும்பத்தினர்



தருமபுரி ஜூன் 15

மை தருமபுரி அமைப்பின் சார்பாக பல்வேறு மனிதநேயமிக்க சேவைகளையும், பல்வேறு விழிப்புணர்வுகளையும் இந்த சமுதாயத்திற்கும், மாணவர்களுக்கும் தொடர்ந்து வழங்கி வருகிறோம். மை தருமபுரி அமைப்பின் நிறுவனத் தலைவர் சதீஸ் குமார் ராஜா , பத்தாம் வகுப்பு வேதியியல் ஆசிரியர் , சதீஸ் குமாரை சந்தித்தபோது தான் இதுவரை 100 முறைக்கு மேல் இரத்ததானம் வழங்கி உள்ளதாக தெரிவித்தார். அதுவரை இரத்ததானம் வழங்காத ஆசிரியர் மணிவண்ணன் மாணவனின் இந்த மனிதநேயமிக்க சேவையை ஆச்சரியம் கண்டு தொடர்ந்து இரத்ததானம் வழங்கி வருகிறார். இவர் மாரண்டஅள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில்முதுகலைவேதியியல்ஆசிரியராக பணியாற்றி வருகிறார். இன்று உலக குருதி கொடையாளர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் அவர் அவரது மனைவி வரலக்ஷ்மி, மகன் ஆகாஷ், நரேந்திரன் ஆகியோர் தருமபுரி மாருதி இரத்தவங்கியில் ரத்ததானம் வழங்கி சிறப்பித்தனர். நல்லமனிதநேயபண்பையும்,சமுதாயத்தையும் உருவாக்க ஆசிரியர் மாணவர் பங்கு மிக முக்கியமான ஒன்றாவதற்கு இந்த ரத்ததானமே சான்றாகும்.

### மார்த்தாண்டம் அருகே

# குளத்தின் கரையை உடைத்து அரசுக்கு இழப்பு

## காவல்துறையில் புகார் கொடுக்காத அதிகாரிகள்



மார்த்தாண்டம், ஜூன்.15

மார்த்தாண்டம் சிராயன் குழி அருகே குழித்துறை நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பம்மகுளத்தின்கரையைஉடைத்து சேதப்படுத்தியது குறித்து நேற்று தினத் தமிழ் நாளிதழில் செய்திகள் வெளியானது. மேலும் சம்பந்தப்பட்ட நீர்வளத்துறையினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. தகவல் கொடுத்து 24 மணி நேரம் கடந்த பின்னரும் குளத்தின் கரையை சேதப்படுத்தி பல லட்சரூபாய்இழப்புஏற்படுத்தியவர்கள்மீதுநீர்வளத்துறை சார்பில் இதுவரைகாவல்துறையில் புகார்எதுவும் கொடுக்கப்படவில்லை.

இதனால் குளத்தின் கரையை உடைத்த சட்டவிரோத கும்பல்களுக்கும் அதிகாரிகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதோ? என்று சந்தேகம் தற்போது வெளிச்சம் போட்டு காட்டுவதாகவே இருப்பதாககூறப்படும் குற்றச்சாட்டுகள் அதிர்ச்சி அளிப்பதாகவே உள்ளது.

நீர்வளத் துறையில் சம்பந்தப்பட்ட பொறுப்பில் உள்ள அதிகாரிகள் பிரதிபலன் பெற்றதால் தான் காவல்துறையில் புகார் கொடுப்பதற்கு தாமதம் ஏற்படுத்தியுள்ளதாகவும் அதனால் தான் மேற்படி நீர்வளத்துறை அதிகாரியின் ஆதரவுடன் கரையை உடைக்கும் பணிகள் நடந்ததாகவும் குற்றச்சாட்டுகள் கூறப்படுகிறது.

ஆகவே தற்போது குமரி மாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள நேர்மையான அதிகாரி என பெயர் பெற்ற மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து குளத்தை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காத அதிகாரி மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க தக்க உத்தரவு பிறப்பதோடு காவல்துறையில் புகார் கொடுக்க நடவடிக்கை எடுத்து அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு கட்ட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

### மணப்பாறை

# மேம்பாலத்தில் இருந்து குதித்து மூதாட்டி தற்கொலை



திருச்சி, ஜூன் 15

மணப்பாறை மாரியம்மன் கோவில் மேம்பாலத்தில் இருந்து 70 வயது மதிக்கத்தக்க மூதாட்டி ஒருவர் கீழே குதித்து தற்கொலை செய்து கொண்டதாக கிடைத்த தகவலின் பேரில் போலீசார் அவரது உடலை மீட்டு பிரேதபரிசோதனைக்காக அனுப்பிவைத்து விசாரணை நடத்தினர். அவர் வைத்திருந்த பையில் இரண்டு தினங்களுக்கு முன்பாக மனப்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான சீட்டும், அதில் சந்திரம்மாள் என்ற பெயரும் இருந்தது. இதை அடுத்து போலீசார் அவருடைய விலாசம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### திருச்சியில்

# மின்சாரம் பாய்ந்து வாலிபர் பலி

திருச்சி, ஜூன் 15

திருச்சி தென்னூர் பகுதியைச் சேர்ந்த ஜபீர் அலி கானின் மகன் அமீர்கான். சமீபத்தில் திருமணம் நடைபெற்ற அமீர்கானின் வீட்டிற்கு சிந்தாமணி அருகே புதிய வீடு பார்த்து, அதில் பொருட்களை ஏற்றியுள்ளனர். அப்போது, அமீர்கானின் சகோதரர் சர்தார் கான் பீரோவை பால்கனி வழியாக ஏற்றியபோது, அது எதிர்பாராதவிதமாக மின்கம்பத்தில் பட்டு மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இது குறித்து கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# நாகர்கோவில் ஆயுதபடை முகாமில் போலீசாருக்கான மெகா பொது சேவை முகாம்

நாகர்கோவில், ஜூன்.15

குமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் முன்னெடுப்பில், காவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனைமேம்படுத்தும் நோக்கில் மாவட்ட ஆயுதப்படை வளாகத்தில் சிறப்பு மெகா பொது சேவை முகாம் சிறப்பாக நடைபெற்றது. பொதுமக்களின் பாதுகாப்பிற்காக இரவு பகலின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றும் காவலர்களுக்கு, அன்றாட தேவையான அரசு மற்றும் நிதி சேவைகளை ஒரே இடத்தில் எளிதாக வழங்கும் வகையில் இந்த முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த முகாமில் பாஸ்போர்ட் விண்ணப்ப சேவை, ஆதார் திருத்தம் மற்றும் புதுப்பித்தல், தொடர் வைப்பு நிதி , அஞ்சல் ஆயுள் காப்பீடு , இந்திய அஞ்சல் கட்டண வங்கி சேவைகள் மற்றும் கண் பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன. இந்த முகாமின் மூலம் காவலர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆதார் சேவையில் 46 பேர், தொடர் வைப்பு நிதியில் 13 பேர், அஞ்சல் ஆயுள் காப்பீட்டில் 6 பேர் , இந்திய அஞ்சல் கட்டண வங்கி சேவைகள் 2 பேர் என 155 பேர் பல்வேறு சேவைகளில் பயனடைந்தனர்.

காவலர்களின் நலனே சிறந்த காவல் சேவையின் அடித்தளம் என்ற எண்ணத்துடன், காவல்துறையினரின் தேவைகளை நேரடியாக அறிந்து பல்வேறு நலத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரின் இந்த முயற்சி, காவலர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடையே பெரும் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுள்ளது.

### குமரியில்

# 7 திருட்டு பைக்கள் பறிமுதல்; குற்றவாளிகள் கைது

நாகர்கோவில், ஜூன். 15

குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பல்வேறு இடங்களில் தொடர் இருசக்கர வாகன திருட்டு சம்பவங்கள் நடைபெற்று வந்தன. இதனைத் தடுத்து, குற்றவாளிகளை விரைந்து பிடிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் தனிப்படை அமைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து, வாகனங்கள் திருடப்பட்ட பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளைத் தனிப்படை போலீசார் தீவிரமாக ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் மூலம் வாகனத் திருட்டில் ஈடுபட்ட குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு, அதிரடியாகக் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து திருடப்பட்ட 7 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வகையில் கோட்டார் காவல் நிலைய இரண்டு வழக்குகளில் குற்றவாளியான தூத்துக்குடி மாவட்டம் மேலூர் பகுதி சேர்ந்த அஜித்குமார் (28) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து மூன்று இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்தனர்.

வடசேரி காவல் நிலைய குற்ற வழக்கின் குற்றவாளியான அதே அஜித்குமார் (28) என்பவரிடம் இருந்து மேலும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. அஞ்சுகிராமம் காவல் நிலைய வழக்கில் தொடர்புடைய தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மகன் செல்வராஜ் (31) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடமிருந்து ஒரு இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர்.

ஆரல்வாய்மொழி காவல் நிலைய வழக்கின் குற்றவாளியான திருவட்டார் சத்துவிளை தோப்பு பகுதி மஜின் (26) என்பவரை கைது செய்த போலீசார் அவரிடம் இருந்து ஒரு பைக்கை பறிமுதல் செய்தனர். மாவட்டத்தில் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.



# திருவட்டாறு அரசு சுற்றுலா விருந்தினர் மாளிகை பழமை மாறாமல் மேம்படுத்தப்படும்

## ஆய்வுக்கு பின் அமைச்சர் தகவல்

மார்த்தாண்டம், ஜூன்.15

திருவட்டாறு பேரூராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகில் நீர்வள ஆதாரத்துறை சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் அரசு சுற்றுலா விருந்தினர் மாளிகையை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், தலைமையில், சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். பின்னர் அமைச்சர் கூறுகையில்:

திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களின் பயன்பாட்டிற்காக அரசு விருந்தினர் சுற்றுலா மாளிகை பல வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்த நிலையில் தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது. இதை பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்டோர் எனது கவனத்திற்கு கொண்டு வந்தன் அடிப்படையில் தற்போது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ரூ.80 இலட்சம் மதிப்பில் இந்த விருந்தினர் மாளிகையில் பரமாரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்போது மேலும் பல பகுதிகள் பழுதடைந்து உள்ளது. திருவட்டாறு அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் திருக்கோவிலுக்கு அருகாமையில் உள்ள சுற்றுலா விருந்தினர் மாளிகை பழமை மாறாமல் மேம்படுத்தப்படும். இவ்வாறு கூறினார்.

இந்த ஆய்வுகளில் பத்மநாபபரம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.செல்லசுவாமி, உதவி ஆட்சியர் (பயிற்சி) மோனிகா, நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, திருவட்டாறு வட்டாட்சியர் மரகதவல்லி உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### மார்த்தாண்டத்தில் இரட்டிப்பு தொகை தருவதாக கூறி

# பெண்ணிடம் ரூ 6.5 லட்சம் மோசடி; 3 பேர் மீது வழக்கு

மார்த்தாண்டம், ஜூன். 15

மார்த்தாண்டம் அருகே காடுவெட்டி என்ற பகுதியை சேர்ந்தவர் கிறிஸ்டோபர் மனைவி வசந்தபாய் (45). கடந்த 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மார்த்தாண்டம் மார்க்கெட் ரோட்டில் உள்ள ஒரு தனியார் கம்பெனியில் பணம் முதலீடு செய்ய சென்றுள்ளார். அப்போது அந்த கம்பெனியின் உரிமையாளரான ஆன்றோ காட்வின் வர்கீஸ், அங்கு வேலை செய்யும் ஜீன் ஜெபமலர் மற்றும் மினிமெரி சசிதா ஆகிய மூன்று பேரும் சேர்ந்து வசந்தபாயிடம் நீ கொடுக்கும் ரூபாய்க்கு இரட்டிப்பாக பணம் கிடைக்கும் என கூறி உள்ளனர்.

இதை நம்பிய வசந்தபாய் அவரிடம் இருந்த ரூ. 10 லட்சத்தை அந்த தனியார் கம்பெனி உரிமையாளரிடம் கொடுத்துள்ளார். பின்னர் பங்கு தொகையாக முதல் ஏழு மாதங்களுக்கு ரூ 50 ஆயிரம் என 3 லட்சத்து 50 ஆயிரத்தை வசந்தபாயின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு இதுவரையிலும் பங்குத்தொகை எதுவும் வங்கி கணக்குக்கு வரவில்லை.

இதனால் பதறிப்போன வசந்த பாய் தனியார் கம்பெனிக்கு சென்று தனது பணத்தை திருப்பி தர கேட்டுள்ளார். அப்போது உரிமையாளர் உள்ளிட்ட மூன்று பேரும் சேர்ந்து வசந்த பாயிடம் உன்னையும் உன் குழந்தைகளையும் கொன்று விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த வசந்த பாய் இது குறித்து மார்த்தாண்டம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் தனியார் கம்பெனியில் உரிமையாளர் ஆன்றோ காட்வின் வர்கீஸ், ஜீன் ஜெபமலர் மற்றும் மினிமேரி சசிதா ஆகிய மூன்று பேர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.